# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 4 | 4 Pages | 05.08.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

4மலர் : 01 | இதழ் : 4 | 4 பக்கங்கள் | 05.08.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்

## தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முன்னுரிமை திட்டங்கள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சென்னை, ஆக. 5

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது முதல் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் இப்போது குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் செப்டம்பர் 15ந்தேதி முதல் செயல்படுத்தப்பட உள்ளது. மக்கள் நலத் திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதி செய்வதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மாதம் ஒருமுறை சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய கூட்டத்தை கூட்டி ஒவ்வொரு திட்டங்களின் செயல்பாடு எந்த அளவுக்கு உள்ளது என்பதை ஆய்வு செய்து வருகிறார். அந்த வகையில் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் உள்ள கூட்டரங்கில் முன்னுரிமை திட்டங்கள் குறித்து



ஆய்வு நடத்தினார். இந்தக் கூட்டத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைஅமைச்சர்உதயநிதிஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, முத்துசாமி, தா.மோ. அன்பரசன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பெரியகருப்பன், கயல்விழி, செல்வராஜ் கலந்து கொண்டனர். இவர்களுடன் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூட்டுறவுத்துறை, உள்ளாட்சித் துறை, வீட்டு வசதி வாரியத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் துறை, வருவாய்த் துறை, ஆதி திராவிட நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலாளர்கள், நிர்வாக இயக்குனர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அரசு செயல்படுத்தி வரும் ஒவ்வொரு திட்டங்களின் தற்போதைய நிலை எந்த அளவில் உள்ளது என்பது பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரிவாக ஆலோசனை நடத்தினார். ஒவ்வொரு திட்டங்களின் செயல்பாடுகள் மாவட்டந்தோறும் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது. எந்த அளவுக்கு மக்களிடம் சென்றடைந்து உள்ளது என்பதை கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு துறை அதிகாரிகளின் கருத்தை கேட்டறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இறுதியில் விரிவாக பேசினார். அப்போது பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.

## முன்னாள் அதிபர் டிரம்ப் குற்றமற்றவர் வரும் 28ம் தேதி அடுத்தகட்ட விசாரணை



வாஷிங்டன், ஆக. 5

2020 அதிபர் தேர்தல் முடிவை மாற்ற முயற்சித்ததாக முன்னாள் அதிபர் டிரம்ப் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக 5வருட சிறை தண்டனைக்குரிய குற்றமான அமெரிக்காவை ஏமாற்றும் நோக்கில் சதி செய்தல், 20 வருட சிறை தண்டனைக்குரிய குற்றமான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல், உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை தடுக்க சதி செய்தல் மற்றும் 10 வருட சிறை தண்டனைக்குரிய குற்றமான அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட உரிமைகளை ஒருவர் நிறைவேற்ற முயலுவதை தடுக்க சதி செய்தல் என 4 முக்கிய பிரிவுகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், வாஷிங்டன் டி.சி. நீதிமன்றத்தில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் இன்று ஆஜரானார். விசாரணையில், 2020ம் ஆண்டு அதிபர் தேர்தலை மாற்றி அமைப்பதற்கான தனது முயற்சிகள் தொடர்பான 4 கிரிமினல் குற்றச்சாட்டுகளில் குற்றமற்றவர் என தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கின் சாட்சியாகத் தெரிந்த எவருடனும் சட்ட வாயிலாக தொடர்பு கொள்ளக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் முன்னாள் அதிபர் விடுவிக்கப்படுவார் என கூறப்படுகிறது. இதையடுத்து, இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஆகஸ்ட் 28ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பிலிப்பைன்சில் விமான விபத்து இந்திய மாணவர் உள்பட 2 பேர் பலி



மணிலா, ஆக. 5

பிலிப்பைன்ஸ் நாட்டின் இலோகோஸ் வடக்கு மாகாணத்தில் லாவோக் என்ற நகரம் உள்ளது. இந்த நகரத்தில் செஸ்னா 152 எனப்படும் ஒரு சிறிய ரக பயிற்சி விமானத்தில் இந்திய மாணவர் அன்ஷும் ராஜ்குமார் பயிற்சி மேற்கொண்டு இருந்தார். அவருடன் விமானத்தின் பயிற்சியாளரும் உடன் இருந்துள்ளார். துகுகேராவ் விமான நிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த அந்த விமானம், திடீரென கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதையடுத்து விமானத்தை தேடும் பணி முடுக்கி விடப்பட்டது. இதில் விமானம் விபத்துக்கு உள்ளானது தெரியவந்தது.

விபத்துக்கு உள்ளான விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த விமானத்தில் பயணம் செய்த அன்ஷும் ராஜ்குமார் மற்றும் அவருடைய பயிற்சியாளர் இருவருமே பலியாகினர். இருவரது உடல்களையும் மீட்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

## அந்தமான் நிக்கோபார் தீவில் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.3ஆக பதிவு

அந்தமான் நிக்கோபார், ஆக. 5

அந்தமான் நிக்கோபார் தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. உயிர் சேதம் அல்லது பொருட்சேதம் குறித்து உடனடி தகவல் எதுவும் இல்லை. அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 4.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், நிலநடுக்கத்தின் ஆழம் 61 கி.மீட்டர் என்றும் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால், உயிர் சேதம் அல்லது பொருட்சேதம் குறித்து உடனடி தகவல் எதுவும் இல்லை என்று அதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த ஜூலை மாதம் 28ம் தேதி நள்ளிரவு 12.53 மணிக்கு அந்தமான் நிகோபார் போர்ட் பிளேயரில் இருந்து 126 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தென் மேற்கு பகுதியில் 5.9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க எஃப்.பி.ஐ.யின் உயர்ந்த பதவியில் இந்தியஅமெரிக்க பெண்

அமெரிக்கா, ஆக. 5

அமெரிக்காவின் எஃப்.பி.ஐ.யில் பணியாற்றும் பெண்களின் விகிதம் சுமார் 24 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது. அந்த அமைப்பின் ஸால்ட் லேக் சிட்டி அலுவலகத்தின் சிறப்பு அதிகாரியாக இந்தியஅமெரிக்க பெண்மணியான ஷோஹினி சின்ஹா என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அமெரிக்காவின் இண்டியானா மாநிலத்தில் உள்ள பர்டியூ பல்கலைக்கழகத்தில் (Purdue University) உளவியலில் இளங்கலை பட்டம் மற்றும் மனநல ஆலோசனையில் முதுகலை பட்டம் பெற்ற ஷோஹினி, எஃப்.பி.ஐயில் பணிபுரிவதற்கு முன்பு, ஒரு சிகிச்சையாளராகவும், பின்னர் இண்டியானாவின் லஃபாயெட் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நிர்வாகியாகவும் பணியாற்றினார். ஷோஹினி சின்ஹா 2001ல் எஃப்.பி.ஐ.யில் சிறப்பு அதிகாரியாக சேர்ந்தார். முதலில் மில்வாக்கி கள அலுவலகத்தில் பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைகளில் பணியாற்றினார். குவாண்டனாமோ விரிகுடா கடற்படைத்தளம், லண்டனில் உள்ள எஃப்.பி.ஐ.யின் சட்ட அலுவலகம் மற்றும் பாக்தாத் செயல்பாட்டு மையம் ஆகியவற்றிலும் தற்காலிக பணிகளில் பணியாற்றினார். 2009ல் கண்காணிப்பு சிறப்பு அதிகாரியாக பதவி உயர்வு பெற்று வாஷிங்டனில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டார். கனடாவை தளமாகக் கொண்ட விசாரணைகள் அமைப்பின் திட்ட மேலாளராக பணியாற்றினர். 2012ல் கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் சட்ட உதவியாளர் பதவி உயர்வு பெற்று ராயல் கனடியன் மவுண்டட் போலீஸ் மற்றும் கனடாவின் பாதுகாப்பு புலனாய்வு சேவையுடன் இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு விஷயங்களில் பணியாற்றினார். 2015ல் அவர் டெட்ராய்ட் கள அலுவலகத்தில் கள மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெற்று சர்வதேச பயங்கரவாத விஷயங்களை விசாரிக்கும் குழுக்களை வழிநடத்தினார்.

2020ம் ஆண்டின் தொடக்கத்தில், தேசிய பாதுகாப்பு மற்றும் கிரிமினல் சைபர் ஊடுருவல் விஷயங்களை துப்புதுலக்கும் சைபர் ஊடுருவல் படைக்கு மாற்றப்பட்டார். பிறகு போர்ட்லேண்ட் கள அலுவலகத்தில் தேசிய பாதுகாப்பு விஷயங்களுக்கும், பின்னர் குற்றவியல் விஷயங்களுக்கும் உதவி சிறப்பு அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார். 2021ல், எஃப்.பி.ஐ. இயக்குநரின் நிர்வாக சிறப்பு உதவியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தற்போதைய பதவி உயர்வு வரும் வரை, வாஷிங்டனில் உள்ள எஃப்.பி.ஐ.யின் தலைமையகத்தில், அந்த பதவியிலேயே தொடர்ந்தார். அமெரிக்காவில் இந்திய பெண்கள் பெரும்பாலும் மென்பொருள் துறையிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் ஒரு இந்தியஅமெரிக்க பெண் எஃப்.பி.ஐ.யில் பல வருடங்கள் சிறப்பாக பணியாற்றி உயர்வான பதவிகளை அடைந்திருப்பதை உலகெங்கிலும் உள்ள இந்தியர்கள் பெருமையாக பார்க்கிறார்கள்.

## தமிழகத்தின் பாதுகாப்பில் காவல் துறை நுண்ணறிவு பிரிவு முன்னுரிமை அளிக்க வேண்டும்: இந்து முன்னணி வலியுறுத்தல்

திருப்பூர், ஆக. 5

தமிழகத்தின் பாதுகாப்புக்கு காவல் துறை நுண்ணறிவுப் பிரிவு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.இதுகுறித்து இந்து முன்னணி மாநிலத் தலைவா் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: இலங்கை செயின்ட் ஆண்டனி தேவாலயத்தில் கடந்த 2019ம் ஆண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின்போது குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதைத்தொடா்ந்து 3 தேவாலயங்கள், 4 நட்சத்திர ஹோட்டல்கள் உள்ளிட்ட 8 இடங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 400க்கும் மேற்பட்டோா் உயிரிழந்தனா். 500க்கும் மேற்பட்டோா் படுகாயம்அடைந்தனா்.இந்ததாக்குதல் கிறிஸ்தவா்களை குறிவைத்து



ஜிகாதி அமைப்பால் நடத்தப்பட்டது. இந்த சம்பவத்தில் தொடா்புடையவா்கள் தமிழகத்திலும் கைது செய்யப்பட்டனா். இதையடுத்து, 2020ம் ஆண்டு கன்னியாகுமரி களியக்காவிளை சோதனைச் சாவடியில் உதவி ஆய்வாளா் வில்சன் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டாா். இந்நிலையில், இந்த சம்பவத்தில் ஈடுபட்டதாக தடை செய்யப்பட்ட 11 இஸ்லாமிய அமைப்புகளில் 5 அமைப்புகள் மீதான தடையை இலங்கை அரசு விலக்கியுள்ளது.கேரளாவில்ஜிகாதி பயங்கரவாதிகள் ஆயுதப் பயிற்சி செய்து வந்த 24 ஏக்கா் இடத்தை என்ஐஏ .,கையகப்படுத்தியுள்ளது. தமிழகத்திலும் இஸ்லாமிய பயங்கரவாதிகள் ஆயுதப் பயிற்சி செய்த இடத்தை என்ஐஏ., அடையாளம் கண்டுள்ளது. தமிழக கடல் எல்லைப்பகுதியில் போதை மருந்து கடத்தல், ஆயுதக் கடத்தல் நடக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழகத்தின் பாதுகாப்பில் காவல் துறை நுண்ணறிவுப் பிரிவு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோவை காந்தி பூங்காவில் தஞ்சம் புகுந்த வவ்வால்கள்

குனியமுத்தூர், ஆக. 5

கோவை மாநகரத்தில் வ.உ.சி. பூங்காவிற்கு அடுத்தபடியாக, காந்தி பூங்கா மிகப்பெரிய அளவில் அமைந்து உள்ளது. இது தற்போது புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. எனவே பூங்காவிற்கு வரும் பொது மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக சலீவன் வீதி, தெலுங்கு வீதி ,ம.ந.க.வீதி உப்பார வீதி , ஆர். எஸ் புரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் தினமும் நடைபயிற்சிக்கு வந்து செல்கின்றனர். எனவே அங்கு ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாட்களில் கூட்டம் அலைமோதிய வண்ணம் இருக்கும். இந்த நிலையில் காந்தி பூங்கா பகுதியில் உள்ள அனைத்து மரங்களிலும் வவ்வால்கள் தஞ்சம் அடைந்து உள்ளன. அவற்றின் கீச்சு குரல்கள் எந்த நேரமும் ஒலித்து கொண்டு உள்ளன. இது அமைதியை தேடி பூங்காவுக்கு வரும் மக்களிடம் ஒரு சிலநேரங்களில் தர்ம சங்கடத்தை ஏற்படுத்துகிறது. இதுகுறித்து நடைபயிற்சிக்கு வந்திருந்த பெண்கள் சிலர் கூறுகையில், தினந்தோறும் நடைபயிற்சிக்கு வரும் எங்களுக்கு காந்தி பூங்கா ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. இங்கு ஏராளமானோர் தினமும் வந்திருந்து இளைப்பாறி விட்டு செல்வர். இந்த நிலையில் காந்தி பூங்கா மரங்களில் சமீப காலமாக வவ்வால்கள் நூற்றுக்கணக்கில் தஞ்சம் புகுந்து உள்ளன. அவற்றின் இரைச்சல் எந்த நேரம் கேட்டுக் கொண்டு உள்ளது. இது எங்களுக்கு மிகுந்த எரிச்சலை ஏற்படுத்துகிறது. பொதுவாக வவ்வால்கள் வீட்டிற்குள் வந்தால் அபசகுணம் என்று பெரியவர்கள் கூறுவார்கள். ஆனால் ஊருக்கு பொதுவான பூங்காவில் அந்த வவ்வால்களை பார்க்கும்போது மனதிற்குள் இனம்புரியாத ஒரு பதட்டம், பயம் ஏற்படுகிறது. மேலும் வவ்வால்கள் போடும் எச்சங்கள், ஒருசில வைரஸ் கிருமியை பரப்பும் சக்தி உடையவை. அவற்றை குழந்தைகள்



மிதிக்க வேண்டி உள்ளது.

இதனால் குழந்தைகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. வவ்வால்களின் எச்சம் மூலம் மிகக் குறைந்த அளவு வைரஸ் மற்றும் பாக்டீரியா கிருமிகள் பரவும் வாய்ப்பு உள்ளது. எனவே அவற்றில் இருந்து பொதுமக்கள் விலகி நிற்பது நல்லது என்று கால்நடை வல்லுனர்கள் கூறி வருகின்றனர்.எனவே காந்தி பூங்கா பகுதியில் இருந்து வவ்வால்களை அப்புறப்படுத்தினால் அனைவரும் பயம், தயக்கம் இன்றி நிம்மதியாக இளைப்பாறலாம். எனவே கோவை மாநகராட்சி இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## அமைச்சராக நீடிக்க எதிர்ப்பு: செந்தில் பாலாஜி வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

சென்னை, ஆக. 5

அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு ஜெயிலில் இருக்கும் செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக இருக்கிறார். இதை எதிர்த்து வக்கீல் ரவி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் 2 வழக்குகள் தொடர்ந்தார்.

அதில் ஒரு வழக்கு இலாகா இல்லாத அமைச்சராக எந்த அடிப்படையில் செந்தில் பாலாஜி பதவியில் இருக்கிறார்.

அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டது.

மற்றொரு வழக்கு செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்த தனது உத்தரவை கவர்னர் திரும்ப பெற அதிகாரம் இல்லை என்றும் தொடரப்பட்டது.

இந்த வழக்குகளை விசாரித்த ஐகோர்ட்டு தலைமை நீதிபதி கங்



காபுர்வாலா, ஆதிகேசவலு ஆகியோர்கவர்னர்அலுவலகத்துக்கு உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரம் உள்ளதா என்று கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பாக எழுத்துப்பூர்வ பதிலை மனுதாரர்தரப்பில் இன்று தாக்கல் செய்தனர். இதையடுத்து இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

# மகளிர் உரிமைத் தொகை திட்டம் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, ஆக. 5

தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை மேற்கொள்கிறார்.



தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இது தொடர்பாக இன்று ஆலோசனை நடைபெற உள்ளது. மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு முதல்கட்டமாக இதுவரை 79.66 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். நேற்று நடைபெற்ற முகாமில் 2.63 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். இரண்டாம் கட்ட முகாம்கள் வரும் 5ம் தேதி முதல் 16ம் தேதி வரை நடைபெற உள்ளன. மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 4ம் தேதி வரை மீண்டும் விண்ணப்பம் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# யானைகளை தொந்தரவு செய்யக்கூடாது வனத்துறையினர் எச்சரிக்கை

உடுமலை, ஆக. 5

உடுமலையில் இருந்து 20கிலோமீட்டர் தொலைவில் உள்ள தமிழககேரள எல்லையில் அமைந்துள்ளது ஆனைமலை புலிகள் காப்பகம். இங்குள்ள வனச் சரகங்களில் புலி, சிறுத்தை, யானை, மான், காட்டெருமை, செந்நாய் உள்ளிட்ட பல்வேறு வகை யானவிலங்குகள்உள்ளன. இங்கு கடந்த ஆண்டு வனத்துறை சார்பில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 300க்கும் மேற்பட்ட யானைகள் இருப்பது தெரியவந்தது. தற்போது வனப் பகுதியில் நிலவும் வறட்சியால் குடிநீருக்காக காலை, மாலை நேரங்களில் உடுமலை மூணாறு சாலையைக் கடந்து அமராவதி அணைக்கு தண்ணீர் குடிக்க யானைகள் செல்கின்றன.



இந்நிலையில், அமராவதி வனச்சரகம் வழியாக செல்லும் வாகன ஓட்டிகள், சாலையை கடந்து செல்லும் யானைகள் மீது கற்களை வீசுவது, செல்பி எடுக்க முயல்வது உள்ளிட்ட விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல, புகைப்படம் எடுப்பதற்காக அருகில் சென்று யானைகளை தொந்தரவு செய்கின்றனர். இதனால் கோபம் அடையும் யானைகள் சுற்றுலாப் பயணிகளை துரத்தும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்நிலையில் யானைகளை தொந்தரவு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வனத் துறையினர் எச்சரித்துள்ளனர். இது குறித்து வனத் துறை அதிகாரிகள் கூறியதாவது: உடுமலை மூணாறு சாலையில் செல்லும் சுற்றுலாப் பயணிகள் வாகனங்களை விட்டு இறங்கி யானைகளை தொந்தரவு செய்யும் சம்பவங்கள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. இதுதொடர்பாக தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இதையும் மீறி விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும், எல்லை மீறுபவர்களை கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# அரியானா வன்முறைக்கு காரணமானவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை: தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 5

வெறுப்பும், பிரிவினையும் நம்மை அழிக்க அனுமதிக்க முடியாது. எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதை அரியானா அரசு உறுதி செய்யவேண்டும்.

அரியானாவில் நடந்த வன்முறைக்கு காரணமானவர்கள் மீது பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: அரியானாவில் சமீபத்தில் நடந்த வகுப்புவாத வன்முறையில் உயிரிழந்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவிக்கிறேன். உண்மையான பலம் என்பது அமைதி, அகிம்சை மற்றும் இணக்கமாக வாழ்வதில் உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வெறுப்பும், பிரிவினையும் நம்மை அழிக்க அனுமதிக்க முடியாது. கலவரக்காரர்களுக்கு எதிராக எந்தவித பாரபட்சமும் இன்றி அரியானா அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அங்கு விரைவில் இயல்பு நிலையை மீட்டெடுக்கவும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதை அரியானா அரசு உறுதி செய்யவேண்டும். இவ்வாறு ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு அஞ்சலகங்களில் தேசிய கொடி விற்பனை

திருப்பூர், ஆக. 5

சுதந்திர தினத்தை முன்னிட்டு திருப்பூர் கோட்டத்தில் உள்ள அஞ்சலகங்களில் தேசியக் கொடி விற்பனை செய்யப்படவுள்ளது. இதுகுறித்து திருப்பூர் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் ஏ.விஜயதனசேகர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு: சுதந்திர தின அமுதப் பெருவிழாவை முன்னிட்டு அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடி ஏற்ற பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதையடுத்து, அனைவருக்கும் தேசியக் கொடி கிடைக்கும் வகையில் திருப்பூர் கோட்டத்தில் உள்ள அனைத்து தலைமை, துணை மற்றும் கிளை அஞ்சலகங்களில் ஒரிரு நாள்களில் தேசியக் கொடி விற்பனைக்கு வரவுள்ளது. தேசியக் கொடிக்கு ரூ.25 விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் முன்பதிவு செய்தால் அஞ்சல் ஊழியர்கள் மூலமாக வீடுகளுக்கே தேசியக் கொடி விநியோகம் செய்யப்படும். மேலும், அருகில் உள்ள அஞ்சலகங்களிலும் ரூ.25 செலுத்தி தேசியக் கொடியைப் பெற்றுக்கொள்ளலாம். அரசு அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மொத்தமாக தேசியக் கொடியை வாங்க விரும்பினால் திருப்பூர் கோட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம், தாராபுரம் தலைமை அஞ்சலகங்களைத் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருப்போரூர் வட்டார அளவில் கைப்பந்து போட்டி: மாவட்ட போட்டிக்கு பள்ளிகள் தேர்வு

மாமல்லபுரம், ஆக. 5

போட்டியை மாமல்லபுரம் அடுத்த நெம்மேலி அரசு மேல்நிலை பள்ளி பொறுப்பேற்று நடத்தியது. 20 பள்ளிகளில் இருந்து, 21 அணிகளை சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.



செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இடையே பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு, மாவட்ட அளவிலான மாணவமாணவிய வீரர்களை தேர்ந்தெடுத்து வருகிறார்கள். அதன்படி, திருப்போரூர் வட்டார அளவிலான கைப்பந்து போட்டியை மாமல்லபுரம் அடுத்த நெம்மேலி அரசு மேல்நிலை பள்ளி பொறுப்பேற்று நடத்தியது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரபாகரன், உடற்கல்வி ஆய்வாளர் திருவளர்ச்செல்வன், ஒன்றிய கவுன்சில் தேசிங்கு, நெம்மேலி ஊராட்சி தலைவர் சீ.ரமணி உள்ளிட்டோர் போட்டியை துவக்கி வைத்தனர். இதில் 20 பள்ளிகளில் இருந்து, 21 அணிகளை சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். 14, 17, 19, வயது பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டிகளில் நெம்மேலி அரசு மேல்நிலை பள்ளி, திருப்போரூர் ஆறுபடைவீடு மெட்ரிகுலேஷன் பள்ளி, கேளம்பாக்கம் புவனகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் பள்ளி, கேளம்பாக்கம் அரசு மகளிர் உயர்நிலை பள்ளி, ஆகியவை முதலிடங்களை பிடித்தது.

இப்பள்ளிகள் மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளது.

# கம்பன் கழகம் சார்பில் 15ம் ஆண்டு கம்பன் விழா

திருப்பூர், ஆக. 5

திருப்பூர் கம்பன் கழகம் சார்பில் 15ம் ஆண்டு கம்பன் விழா ஹார்வி குமாரசாமி திருமண மண்டத்தில் வருகிற 6ந்தேதி ( ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு திருப்பூர் கம்பன் கழகத்தலைவர் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் கே.ஆர்.நாகராஜன் வரவேற்புரையாற்றுகிறார். இதைத்தொடர்ந்து, கம்பவாரிதி இலங்கை இ.ஜெயராஜ் தலைமையில் கம்பன் காவியத்தில் கற்போர் நெஞ்சைப் பெரிதும் நெகிழச் செய்பவர் அயோத்தி பரதனே, கிஷ்கிந்தை வாலியே, இலங்கை கும்பகர்ணனே என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நடைபெறுகிறது. இதில், 'அயோத்தி பரதனே' என்ற தலைப்பில் சென்னை கோ.சரவணன், ஈரோடு வளர்மதி ஆகியோரும், 'கிஷ்கிந்தை வாலியே' என்ற தலைப்பில் திருச்சி விஜயசுந்தரி, ராஜபாளையம் உமாசங்கர் ஆகியோரும், 'இலங்கை கும்பகர்ணனே' என்ற தலைப்பில் பெருந்துறை ரவிகுமார், திருப்பூர் பட்டயக்கணக்காளர் ஜெய்வநாயகி ஆகியோரும் பேசுகின்றனர். மேலும், பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான போட்டிகள், கருத்தரங்கமும் நடைபெறுகின்றன. முடிவில் கம்பன்கழகதுணைச்செயலாளர் கௌசல்யாவேலுசாமி நன்றி கூறுகிறார்.

# சிறுவாபுரி முருகன் கோவிலில் 2 மாதத்தில் பக்தர்கள் ரூ.56.76 லட்சம் காணிக்கை

பெரியபாளையம், ஆக. 5

இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கே.சித்ராதேவி முன்னிலையில் உண்டியல்கள் திறக்கப்பட்டன. இரண்டு மாதங்களில் 105 கிராம் தங்கத்தை காணிக்கையாக பக்தர்கள் செலுத்தி உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 2 மாதங்களுக்குப் பின்னர் உண்டியல்கள் திறக்கப்பட்டு பக்தர்கள் செலுத்திய காணிக்கை தொகை எண்ணப்பட்டது. இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கே.சித்ராதேவி, கோயில் நிர்வாக அதிகாரிகள் சிறுவாபுரி சோ.செந்தில்குமார், திருநின்றவூர் சரவணன், ஆய்வாளர் கலைவாணன் மற்றும் பக்தர்கள் முன்னிலையில் உண்டியல்கள் திறந்து எண்ணப்பட்டன. இதில், ரூ.56 லட்சத்து 76 ஆயிரத்து 634 ரொக்கம், 105 கிராம் தங்கம், 5 கிலோ வெள்ளி ஆகியவற்றை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

# உழவர் உற்பத்தி நிறுவனம் கலெக்டர் திறந்து வைத்தார்

அவிநாசி, ஆக. 5

அவிநாசியில் அவிநாசியப்பர் உழவர் உற்பத்தி நிறுவனம் திறப்பு விழா, உறுப்பினர் சேர்க்கை முகாம், விவசாய கருத்தரங்கு என முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற கலெக்டர் கிறிஸ்துராஜ் உழவர் உற்பத்தி நிறுவனத்தை திறந்துவைத்தார். பின்னர், அவர் பேசியதாவது: விவசாயிகள் தங்களது விளைபொருட்களைதாங்களே சந்தைப்படுத்தும் வகையில் உழவர் உற்பத்தி நிறுவனத்தை தொடங்கியுள்ளனர். இம்மையத்தில் தக்காளி, வெங்காயம், வெண்டைகாய், கத்திரிக்காய் உள்ளிட்ட அனைத்து விளைபொருட்களையும் நேரடியாக விற்பனை செய்யவுள்ளனர். இதனை பொதுமக்கள் பயன்படுத்திகொள்ள வேண்டும். இந்த உழவர் உற்பத்தி நிறுவனத்தில் சேரும் உறுப்பினர்களுக்கு காப்பீடு வழங்குவதுடன், கோவையில் உள்ள பிரபல மருத்துவமனையில் 10 சதவீத சலுகைக் கட்டணத்தில் சிகிச்சை பெறும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளனர். இதேபோல விவசாயத்துக்கான தேவையான அரசு மானியங்கள், வங்கி உதவிகள் ஆகியவற்றையும் செய்துத் தருகின்றனர் என்றார். நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் மாரியப்பன், மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) அசோக்குமார், வேளாண்மை உதவி இயக்குநர் அன்பழகி, மாவட்ட முன்னோடி வங்கி முதன்மை மேலாளர் ரவி, பேரூராட்சித் தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, அத்திக்கடவு ஒருங்கிணைப்பாளர் பொன்னுக்குட்டி, சின்னேரிபாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் சரவணன், உழவர் உற்பத்தி நிறுவன உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் பள்ளி மாணவர்களுக்கு போக்குவரத்து செலவுத்தொகை வழங்க கோரிக்கை

திருப்பூர், ஆக. 5

திருப்பூர் மாவட்டத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசுப்பள்ளிகள் உள்ளன. ஒவ்வொரு பள்ளியிலும், மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டுப்பயிற்சி அளிக்க உடற்கல்வி ஆசிரியர்கள் உள்ளனர். பள்ளி கல்வித்துறை வாயிலாக குடியரசு தினவிழா மற்றும் பாரதியார் பிறந்த தின விழா விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதேபோல, குறுமைய போட்டியைத் தொடர்ந்து மாவட்ட மற்றும் கல்வி மாவட்ட அளவிலான போட்டிகள், மண்டல மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் நடப்பு கல்வியாண்டு, குறுமைய போட்டி துவங்கியுள்ளது. மாணவர்களும், ஆர்வத்துடன் போட்டியில் பங்கேற்க தீவிரம் காட்டி வருகின்றனர்.



இந்த நிலையில் போட்டியை நடத்தும் பள்ளி நிர்வாகமே, மாணவர்களுக்கான சிற்றுண்டி, தண்ணீர், ட மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான உணவு செலவினங்களை ஏற்க வேண்டும். ஆனால் அரசால் அப்பள்ளிக்கான நிதியை விடுவிப்பதில் தாமதம் ஏற்படுவதால், அந்தந்த பள்ளித்தலைமையாசிரியர்களே பொது நிதியில் இருந்து செலவுக்கு அளித்து வருகின்றனர். இதனால் விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவ மாணவிகளுக்கு போக்குவரத்து செலவு மற்றும் தினப்படியை உயர்த்தி வழங்க கோரிக்கை எழுந்துள்ளது. இது குறித்து பள்ளித்தலைமையாசிரியர்கள் கூறியதாவது: மாணவர்களுக்கு பொது நிதியில் இருந்து, போக்குவரத்து செலவு மற்றும் தினப்படியாக ரூ.125 வரை வழங்கப்பட்டு வருகிறது. ஒரே நேரத்தில் அதிகப்படியான மாணவர்கள் கலந்து கொண்டால், தலைமையாசிரியர்கள் சொந்த செலவில் மாணவர்களை அனுப்பி வைக்க வேண்டிய நிலை உள்ளது. நடப்பாண்டு போட்டிகள் துவங்க உள்ள நிலையில் அதற்கான தொகையை அரசால் உயர்த்தி வழங்க வேண்டும். இதேபோல போட்டி நடத்தும் பள்ளி நிர்வாகம், இதற்கான அனைத்து தொகையையும் செலவிட வேண்டும். நிதி விடுவிக்க தாமதம் ஏற்படுவதால் மாணவர்களுக்கு சிற்றுண்டி மற்றும் பயணப்படி வழங்குவதில் குழப்பம் நிலவுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.




"மாற்றுத்திறனாளி பெண்ணின் புத்தக மோகம்" புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் கந்தர்வகோட்டை அருகே உள்ள கொத்தம்பட்டியை சேர்ந்த மாற்றுத்திறனாளி சுகுணா என்ற பெண்மணி ஆம்புலன்ஸ் மூலமாக வந்து ஒவ்வொரு ஸ்டாலிலும் பார்வையிட்டு புத்தக பதிப்பாளர்கள் இலவசமாக கொடுத்த புத்தகத்தையும், அர்த்தம் பதிப்பகம் மூலமாக குறும்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் வழங்கினார். உடன் கிருபா மற்றும் பலர் உள்ளனர்.

# காங்கிரஸ் எம்.பி. திருநாவுக்கரசர், மகன் மீது அண்ணாமலை பாய்ச்சல்

சென்னை, ஆக. 5

'என் மண் என் மக்கள்' என்ற பெயரில் நடைபயணம் மேற்கொண்டுள்ள தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை தான் பயணிக்கும் தொகுதிகளில் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை சுட்டிக்காட்டியும், தி.மு.க., காங்கிரசை சேர்ந்த எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் செய்ய தவறியது பற்றியும் குறிப்பிட்டு வருகிறார். அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபயணம் மேற்கொண்ட போது, திருநாவுக்கரசர் மீதும் அவரது மகனும் அறந்தாங்கி தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ.வுமான ராமச்சந்திரன் மீதும் குறை கூறினார். அவர் கூறியதாவது: சிறு, குறு தொழில்கள் பலன் பெற ரூ.750 கோடி நிதி உதவி. அதன்மூலம் 31 ஆயிரத்து 965 சிறு தொழில் நிறுவனங்கள். 5 லட்சம் வேலை வாய்ப்புகள் என பிரதமர் கொண்டு வந்த நலத்திட்டங்கள் பல. புதுக்கோட்டை மாவட்டத்துக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றினார்களா? திருச்சி எம்.பி.



திருநாவுக்கரசரும், அவரது மகன் அறந்தாங்கி எம்.எல்.ஏ. ராமச்சந்திரனும் அவர்கள் குடும்பத்தை தவிர மக்களுக்கென்று எதுவும் செய்தார்களா? அறந்தாங்கியில் மோடியின் முகவரியாக செயல்படும் குறைந்த விலை மக்கள் மருந்தகங்கள் திட்டத்தில் தமிழகத்தில் உள்ள 820 மருந்தகங்களில் அறந்தாங்கியை சேர்ந்த பாலசுப்பிரமணியன் என்பவரும் ஒரு கடை நடத்தி வருகிறார். பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 1.2 லட்சம் பேர் பலன் அடைந்து உள்ளார்கள். அவர்களில் ஷகீலா பானுவும் ஒருவர். இலவச உணவு தானிய திட்டத்தில் பயன் அடைபவர்களில் கறம்பக்குடி பாக்கியலட்சுமியும் ஒருவர். கடந்த 9 ஆண்டுகளில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் தமிழகத்துக்கு ரூ.48 ஆயிரத்து 506 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2.2 லட்சம் சாலையோர வியாபாரிகளுக்கு ஸ்வானிதி திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்பட்டுள்ளது. அறந்தாங்கியில் உதாரணத்துக்கு அஞ்சுகம். இவர்களெல்லாம் மோடியின் முகவரிகளாக இருக்கிறார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த தி.மு.க. மத்திய அரசின் திட்டங்களை தங்கள் திட்டங்களாக காட்டி மக்களை ஏமாற்றி கொண்டிருக்கிறார்கள். தி.மு.க காங்கிரஸ் சந்தர்ப்பவாத கூட்டணி. வருகிற தேர்தலில் இது தோல்வியை தழுவும். இவ்வாறு அவர் கூறினார். அண்ணாமலை குற்றச்சாட்டுக்கு பதில் அளித்து திருநாவுக்கரசர் எம்.பி. கூறியதாவது: அறந்தாங்கி தொகுதி இப்போது ராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்குள் உள்ளது. அது கூட தெரியாமல் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக பேசி இருக்கிறார். 10 நிமிடம் அறந்தாங்கி தொகுதியில் நடந்து விட்டு சொகுசு வாகனத்தில் ஏறி சென்றிருக்கிறார். அதற்குள் தொகுதி முழுவதையும் பார்த்து தெரிந்து கொண்டாரா? அந்த தொகுதிக்கு ள் நிறைவேற்றப்பட்டுள்ள அடிப்படை தேவைகள், ரூ.20 கோடியில் நிறைவேற்றப்படும் குடிநீர் திட்டப்பணிகள், மாவட்ட மருத்துவமனை விரிவாக்கம் என்று எவ்வளவோ பணிகள் நடக்கின்றன. எம்.எல்.ஏ.விடம் கேட்டால் அவர் பட்டியலை தரப்போகிறார். ஆனால் அண்ணாமலைக்கு தெரிந்தது அவ்வளவுதான். பாவம். ஒரு பஞ்சாயத்து தேர்தலில் கூட ஜெயிக்காத அண்ணாமலை எங்களை விமர்சிக்கிறார். ஒரு பகுதிக்கு செல்லும்போது ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக எதையாவது பேசி வருகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய மந்திரி நிர்மலா சீதாராமனுடன் நாளை வணிகர் சங்க பேரமைப்பு நிர்வாகிகள் சந்திப்பு

சென்னை, ஆக. 5

தமிழக மின்சார வாரியம் எடுத்துள்ள முடிவு பொதுமக்களையும், வணிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் நலன் காத்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக மின்சார வாரியம் எடுத்துள்ள முடிவு பொதுமக்களையும், வணிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலப் பொதுச்செயலாளர் கோவிந்தராஜுலு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: மின்சார மீட்டருக்கு மாத வாடகை வசூலிக்க தமிழக மின்சார வாரியம் எடுத்துள்ள முடிவு பொதுமக்களையும்,வணிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. தற்போது ஒருமுனை (சிங்கிள் பேஸ்) போர்டுகளுக்கு ரூபாய் 300ம் மும்முனை இணைப்புக்கு ரூ.720ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதையும் அதிகப்படுத்திட மின்சார வாரியம் முடிவெடுத்துள்ளதாக தெரியவருகின்றது. இந்நடவடிக்கைகள் ஏற்கனவே நிதிச்சுமையில் உள்ள வணிகர்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதோடு, வணிகத்தை விட்டு வெளியேறும் நிலைமை உருவாகிவிடக்கூடாது என்பதை தமிழக அரசுகவனத்தில்கொண்டு, மின்மீட்டர் வாடகை, மின் இணைப்பு சாதனங்களுக்கு கூடுதல் கட்டணம் போன்றவற்றை தவிர்த்து, பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் நலன் காத்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், ஜி.எஸ்.டி துறையில் அமலாக்கத்துறை அனுமதிக்க கூடாது என்பதை வலியுறுத்தியும், அதிகபட்ச 28 சதவிகித வரியை குறைக்க வலியுத்தியும் தென்மண்டலம் சார்பாக தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா கர்நாடகா உள்ளிட்ட வணிக நிர்வாகிகள் மத்திய நிதியமைச்சர்நிர்மலாசீதாராமன் அவர்களை வருகின்ற ஆகஸ்ட் 5ந் தேதி அன்று சந்தித்து முறையிட இருக்கின்றோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆடி கிருத்திகை.. திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 9ம் தேதி உள்ளூர் விடுமுறை: மாவட்ட கலெக்டர் அறிவிப்பு

திருத்தணி, ஆக. 5

திருத்தணியில் அமைந்துள்ள திருமுருகப்பெருமானின் ஐந்தாம்படை வீடான அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வரும் 9ம் தேதி (புதன்கிழமை) நடைபெறவிருக்கும் ஆடிக்கிருத்திகை திருவிழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார்நிலைக் கருவூலங்களும் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு 9ம் தேதி செயல்படவேணடும். இந்த விடுமுறை நாளை ஈடுசெய்யும் பொருட்டு 26ம் தேதி (சனிக்கிழமை) அன்று பணிநாளாக அறிவிக்கப்படுகிறது. இந்த உள்ளூர் விடுமுறையானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என மாவட்ட கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் தெரிவித்துள்ளார்.




கருவூலங்களும், சார்நிலைக் கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படவேணடும். விடுமுறை நாளை ஈடுசெய்யும் பொருட்டு 26ம் தேதி பணிநாளாக அறிவிக்கப்படுகிறது. மேலும் படிக்க

# பல்லடத்தில் டாஸ்மாக் கடையை அகற்ற கோரி எம்.எல்.ஏவிடம் பொதுமக்கள் கோரிக்கை மனு

பல்லடம், ஆக. 5

பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், கணபதி நகர் மற்றும் செட்டிபாளையம் ரோடு பொதுமக்கள், எம்.எஸ்.எம்.ஆனந்தன் எம்.எல்.ஏ.,வை சந்தித்து அளித்த மனு அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது; பல்லடம் செட்டிபாளையம் சாலையில் உள்ள அரசு டாஸ்மாக் கடையால், பல்வேறு இன்னல்கள் ஏற்படுகிறது. பள்ளிக் குழந்தைகள், பெண்கள், அந்த வழியே செல்வதற்கு



அச்சப்படுகின்றனர். மேலும் போக்குவரத்து பாதிப்படுகின்றது. எனவே அந்த டாஸ்மாக் கடையை அங்கிருந்து அகற்ற வேண்டும். மேலும் மது கடையை அகற்றக்கோரி வரும் ஆகஸ்ட் 8ந்தேதி ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். எனவே அந்த மது பானகடையைஅங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. மனுவைப் பெற்றுக் கொண்ட எம்.எஸ்.எம்.ஆனந்தன் எம்.எல்.ஏ. இதுகுறித்து மாவட்ட கலெக்டரிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவு தெரிவிப்பதாகவும் கூறினார்.

# இறைச்சியில் விஷம் வைத்து 10 நாய், பூனைகள் கொலை

திருப்பூர், ஆக. 5

திருப்பூர் அருகேயுள்ள திருமுருகன்பூண்டி நகராட்சிக்கு உட்பட்ட ஜே.ஜே. நகரில் 20க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இங்கு ஏராளமான நாய்கள் சுற்றி வருகின்றன. அவற்றிக்கு அப்பகுதியை சேர்ந்த சிலர் உணவு கொடுத்து வந்துள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் 10க்கும் மேற்பட்ட நாய்கள் திடிரென்று வாந்தி எடுத்தபடி உயிரிழந்த்தாக கூறப்படுகிறது. அதே போல் வீட்டில்



வளர்க்கப்பட்ட பூனைகளும்இறந்துகிடந்துள்ளன. இது அந்த பகுதி மக்கள் இடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து அந்த பகுதி மக்கள் கூறியதாவது; எங்கள் பகுதியில் நிறைய தெருநாய்கள் உள்ளன. கடந்த 2 நாட்களுக்கு முன்பு நாய்கள் அங்கேங்கே வாந்தி எடுத்தப்படி சுருண்டு விழுந்து இறந்தது. யாரோ மர்ம நபர்கள் நாய்களுக்கு இறைச்சியில் விஷம் வைத்து கொன்று இருப்பார்கள் என்று சந்தேகிக்கிறோம். இது குறித்து விசாரணை நடத்தி இந்த செயலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# பல்லடம் தாலுகா அலுவலகத்தில் வருவாய்த்துறை பணிகள் குறித்து சப் கலெக்டர் ஆய்வு

பல்லடம், ஆக. 5

பல்லடம் தாலுகா அலுவலகத்தில் மகளிர் உரிமைத்தொகை திட்ட பதிவு குறித்து சப் கலெக்டர் ஸ்ருதன்ஜெய் நாராயணன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பல்லடம் நகராட்சி ஆணையாளர், சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர், மற்றும் வருவாய் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அரசியல் தலையீடுகள்இல்லாமல், சரியான பயனாளிகளுக்கு திட்டம் சென்றடைய வேண்டும் என அறிவுறுத்தினார். இதைத்தொடர்ந்து பல்லடம் வட்டார பகுதியில் அதிக விபத்துக்கள் நேரும் இடங்களை பார்வையிட்ட அவர் இதுகுறித்து போக்குவரத்து போலீசார்



மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பல்லடம் அரசு மருத்துவமனை, சார் பதிவாளர் அலுவலகம் ஆகிய இடங்களை பார்வையிட்ட அவர் மருத்துவமனைக்கு வரும் பொது மக்களுக்கு சுகாதார வளாகம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை முறையாக செயல்படுத்த அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது பல்லடம் தாசில்தார் ஜெய்சிங் சிவக்குமார் தலைமையிடத்து துணை தாசில்தார் சுப்பிரமணியம், மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர். ஆய்வுப் பணிக்கு வந்த சப் கலெக்டர் ஸ்ருதன் ஜெய் நாராயணனிடம் சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு சார்பில் செட்டிபாளையம் ரோட்டில் உள்ள அரசு மது பான கடையை இடமாற்றம் செய்ய வேண்டும் என கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதற்கிடையே தாலுகா அலுவலகத்தில் இருந்த பழைய குப்பைகளை தீ வைத்து எரித்தனர். அதில் பொது மக்களின் மனுக்களும் இருந்ததாக சிலர் கூறியதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதே போல மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் மகளிர் உரிமைத்தொகை திட்ட பதிவுகள் குறித்து பல்லடம் தாலுகா அலுவலகம் மற்றும் அரசு பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

# ஆதிச்சநல்லூரில் 'சைட் மியூசியம்' அமைக்கும் பணி நாளை தொடக்கம்: நிர்மலா சீதாராமன் தொடங்கி வைக்கிறார்

செய்துங்கநல்லூர், ஆக.5

கண்ணாடி பேழை அமைத்து பார்வையாளர் பார்வையிடவும் பணி நடந்து வருகிறது. இந்தியாவிலே முதல் முதலில் சைட் மியூசியம் அமைவது மிகவும் விசேஷமாக கருதப்படுகிறது.

மத்திய அரசு சார்பில், தாமிரபரணி கரையில் உள்ள தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் கடந்த 2020ம் ஆண்டு நடந்த மத்திய பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவித்திருந்தார். இந்த அருங்காட்சியகத்தில் அகழாய்வு பணியின் போது எடுக்கப்பட்ட பொருட்களை கொண்டு காட்சிப்படுத்தப்பட உள்ளது. இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக ஆதிச்சநல்லூர் பரம்பில் சைட் மியூசியம் அமைக்கவும், அதன் மேல் கண்ணாடி பேழை அமைத்து பார்வையாளர் பார்வையிடவும் பணி நடந்து வருகிறது. உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கும் பணிக்காக ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு அகழாய்வு பணிகள் தொடங்கியது.

அகழாய்வு பணியில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளை ஆவணப்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது. தற்போது ஆதிச்சநல்லூரில் இருந்து ஸ்ரீவைகுண்டம்



செல்லும் சாலையின் ஓரத்தில் 5 ஏக்கரில் அருங்காட்சியகம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் செந்தில்ராஜ் உத்தரவின் பேரில், அப்போதைய ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் கோபாலகிருஷ்ணன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சங்கர்கணேஷ் உதவியுடன் ஆதிச்சநல்லூர் மக்கள் சார்பில் இந்த இடங்களை இலவசமாக வாங்கி கொடுத்தார். இதனால் இங்கு பணிகள் மிக விரைவாக நடந்தது. இந்தியாவில் 5 இடத்தில் மியூசியம் அமைக்கும் பணியில், முதல் முதலாக ஆதிச்சநல்லூரில் சைட் மியூசியம் அமைக்கப்பட்டு திறப்பதற்கு தயாராக உள்ளது. இதுகுறித்து இந்திய தொல்லியல் துறை இயக்குநர் அருண்ராஜ் கூறியதாவது: சைட் மியூசியம் என்பது இந்தியாவில் முதல் முறையாக ஆதிச்சநல்லூரில் அமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக தற்போது 'பி' சைட்டில் கண்ணாடி மூலம் உள்ளது உள்ளபடியே தோண்டப்பட்ட குழிகள் மூடாமல் அதன் மீது கண்ணாடி பேழைகள் அமைத்து அதன் வழியாக பொருள்களை பயணிகள் பார்க்கும் வண்ணம் காட்சிபடுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளே விளக்குகள் பொறுத்தப்பட்டு பார்க்கும் பார்வையாளர்களுக்கு முதுமக்கள் தாழிகள், அதனுள் கிடைத்த பொருள்கள் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சைட் மியூசியத்தினை சுற்றி பூங்கா மற்றும் புகைப்பட காட்சி அமைத்து உள்ளே வரும் தொல்லியல் ஆர்வலர்களை திருப்திபடுத்தும் வண்ணம் அமைத்து வருகிறோம் என்று கூறினார். இதற்கான பணி இரவு பகலாக நடந்து வருகிறது. ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம் அமைக்கும் பணிக்காக கண்ணாடி பேழை அமைக்கும் பணி நிறைவடைந்து விட்டது. மேலும் இருபுறமும் மூங்கில் மறைவு கொண்டு அடைக்கும் பணி நடந்து வருகிறது.

கண்ணாடி பேழைக்குள் முதுமக்கள் தாழி இருக்கும் இடம் பார்வையாளர்களுக்கு மிகவும் விசேஷமாக தெரிய மின்விளக்கு அமைக்கும் பணி நடந்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல்அந்தசைட்டை சுற்று வர தடுப்பு கம்பி அமைக்கும் பணியும் நடந்து வருகிறது. ஐரோப்பா, சீனா, மேற்கு ஆசியா கண்டத்திற்கு நிகரான இந்த சைட் மியூசியம் ஆதிச்சநல்லூர் அமைய இருப்பது தொல்லியல் ஆர்வலர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 1876ல் இந்தியாவில் முதல் முதலில் அகழாய்வு நடந்த ஆதிச்சநல்லூரில் சுமார் 147 வருடங்களுக்கு பிறகு இந்தியாவிலே முதல் முதலில் சைட் மியூசியம் அமைவது மிகவும் விசேஷமாக கருதப்படுகிறது.

ஆதிச்சநல்லூர் சைட் மியூசியம் இயக்குனர் முனைவர் அருண்ராஜ் தலைமையில் டெல்லி தொல்லியல் கண்காணிப்பாளர் அணில் சிங், டெல்லி துணை தொல்லியல் கண்காணிப்பாளர் அறவாழி, தொல்லியல் ஆய்வாளர் யதீஸ்குமார், பொறியாளர் கலைச்செல்வன் உள்பட அதிகாரிகள் இரவு பகலாக இந்த தொல்லியல் சைட் மியூசியம் பணியை பார்வையிட்டு வருகின்றனர். ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம் அமைக்கும் பணியை நாளை மறுநாள் (5ந்தேதி) காலை 10 மணிக்கு மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தொடங்கி வைக்கிறார். இதற்காக தனி மேடை அமைக்கும் பணி பிரமாண்டமாக நடந்து வருகிறது. இந்த நிகழ்ச்சியில் கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி, தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி, மாவட்ட கலெக்டர் செந்தில்ராஜ் உள்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

# காங்கேயம் சிவன்மலை கோவிலுக்கு வாகனங்கள் செல்ல அனுமதி: பக்தர்கள் மகிழ்ச்சி

திருப்பூர், ஆக .5

மலைக்கோவிலுக்கு மேலே செல்லும் சுற்றுப்பாதை முழுமையாக புதிதாக செப்பனிடுதல் பணிகள் இருந்தாதல் வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அடிவாரத்தின் நுழைவுச்சீட்டு வழங்கும் இடத்திலும், மலைமீது அமைந்துள்ள வாகன நிறுத்தும் இடங்களிலும் வாகனங்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பிரசத்தி



பெற்றது. இந்த மலைக் கோவிலுக்கு நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் கடந்த மாதம் முதல் மலைக்கோவிலுக்கு மேலே செல்லும் சுற்றுப்பாதை முழுமையாக புதிதாக செப்பனிடப்பட்டு அதன் பணிகள் நடைபெற்று வந்ததால் மலைப்பாதையில் எந்த வாகனங்களையும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. பக்தர்கள்அனைவரும் படியிலேயே ஏறிச் சென்றனர். வயதானவர்கள் பலரும் மலைக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்த இயலாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் அவரோடு போடும் பணிகள் அனைத்தும் முடிந்து இன்று ஆடிப் பெருக்கு தினத்தை முன்னிட்டு திருக்கோவில் அடிவாரத்தில் பக்தர்கள் அதிகம் பேர் வந்ததால் மலைப்பாதை திறக்கப்பட்டு பயன்பாட்டுக்கு விடப்பட்டது. இதனால் அடிவாரத்தின் நுழைவுச்சீட்டு வழங்கும் இடத்திலும், மலைமீது அமைந்துள்ள வாகன நிறுத்தும் இடங்களிலும் வாகனங்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது.

# புதிய அறிவிப்பை வெளியிட்ட ஜாக்சன் துரை 2



இயக்குனர் பி.வி.தரணி இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'ஜாக்சன் துரை 2'. இப்படத்தில் சத்யராஜ் மற்றும் சிபி சத்யராஜ் இணைந்து நடிக்கின்றனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு இயக்குனர் பி.வி.தரணி இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'ஜாக்சன் துரை'. இப்படத்தில் சத்யராஜ் மற்றும் சிபி சத்யராஜ் இணைந்து நடித்திருந்தனர். மேலும், பிந்து மாதவி, கருணாகரன், மொட்டை ராஜேந்திரன் உள்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். காமெடி பேய் படமாக உருவான இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை



பெற்றது. இதைத்தொடர்ந்து இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. இதிலும் சத்யராஜ், சிபிராஜ் இணைந்து நடிக்கிறார்கள். கதாநாயகியாக சம்யுக்தா விஸ்வநாதன் நடிக்கிறார்.

மேலும், சரத் ரவி, மணிஷா ஐயர், பாலாஜி, ரசிகா, யுவராஜ்கணேசன் உள்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். ஜாக்சன் துரை 2 போஸ்டர் 1940ல் ஊட்டி அருகிலுள்ள கிராமம் ஒன்றின் கதையை மையமாக கொண்டு உருவாகி வரும் இப்படத்திற்கு சித்தார்த் விபின் இசையமைக்கிறார். 'ஜாக்சன் துரை 2' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இன்று படக்குழு வெளியிட்டது. இதைத்தொடர்ந்து, தற்போது சிபி சத்யராஜின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. குதிரை மீது சிபி சத்யராஜ் அமர்ந்திருக்கும் இந்த போஸ்டர் இணையத்தில் வைரலாகி வருகிறது.



# விரைவில் உருவாகும் பீட்சா 4.. தயாரிப்பாளர் அதிரடி அறிவிப்பு

3 ஆகஸ்ட் 2023 7:16 PM இயக்குனர் மோகன் கோவிந்த் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான படம் 'பீட்சா 3'. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி, ரம்யா நம்பீசன் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் பீட்சா. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து அசோக் செல்வன் நடிப்பில் பீட்சா 2 திரைப்படம் வெளியானது. இதைத்தொடர்ந்து மங்காத்தா, மேகா, ஜீரோ, பொன்னியின் செல்வன் படங்களில் நடித்த அஸ்வின் நடிப்பில் பீட்சா 3 திரைப்படம் உருவானது. இப்படத்தை இயக்குனர் மோகன் கோவிந்த் இயக்கினார். இப்படத்தை திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்தது. பீட்சா 3 இதில் காளி வெங்கட், பவித்ரா, கவுரவ் நாராயணன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். பெரும் எதிர்பார்ப்பில் உருவான இப்படம் ஜூலை 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுவருகிறது.இந்நிலையில்,'பீட்சா'திரைப்படவரிசையில்நான்காம்பாகம்விரைவில்தொடங்கப்படவுள்ளதாக தயாரிப்பாளர் சி.வி. குமார் அறிவித்துள்ளார். இது குறித்து பேசிய அவர், "பீட்சா மூன்று பாகங்களின் வெற்றி, இப்படத்தின் மீது ரசிகர்கள் வைத்துள்ள அபிமானத்தையும் தரமான உள்ளடக்கத்தை என்றுமே அவர்கள் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையையும் தொடர்ந்து அளித்து வருகிறது. எனவே அவர்கள் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் 'பீட்சா' நான்காம் பாகம் விரைவில் தொடங்கும். இதன் இயக்குனர், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப குழுவினர் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்" என்று கூறினார்.

# கோபத்தை குறியீடாக சொல்லும் கதையின் நாயகனான புகழ்!



இயக்குனர் எம்.ஜே.இளன் இயக்கத்தில் உருவாகும் திரைப்படம் 'துடிக்கிறது மீசை'. இந்த படத்தில் குக் வித் கோமாளி புகழ் கதாநாயகனாக நடிக்கிறார். யோகி வீர் பிக்சர்ஸ் தயாரிப்பில் பி.ராம் வழங்கும் இப்படத்தின் தொடக்க விழா இன்று பூஜையுடன் நடைபெற்றது. இந்த விழாவில் விழாவில் புகழ், முருகதாஸ், சந்தானம் படங்களின் மூலம் பிரபலமான மாறன்,இசை அமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா உள்ளிட்ட படக்குழுவினரும்,சிறப்புவிருந்தினர்களாகத்தயாரிப்பாளர்கே.ராஜன்,நடிகர்செந்தில், இயக்குனர் பேரரசு, மது. தியாகராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர். 'துடிக்கிறது மீசை' படத்தைப் பற்றி இயக்குனர் எம்.ஜே. இளன் பேசியதாவது, "படத்தின் கதை என்னவென்றால், காதல் தவறில்லை. ஆனால்,காதலுக்காக வாழ்க்கையை அழித்துக் கொண்டு தங்கள் எதிர்காலத்தை வீணடிப்பதைத் தவறு என்று சொல்கிற கதை இது. காதலுடன் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. காதலில் விழுந்து தன்னை அழித்துக் கொள்ளும் இளைஞர்களைப் பற்றி இந்த கதை பேசுகிறது. இக்கதை மதுரையிலிருந்து சென்னைக்குப் பயணிக்கிறது. இந்த கதையை இக்காலத்திற்கு ஏற்ற வகையில் நாங்கள் காதல், நகைச்சுவை கலந்து சுவாரஸ்சியமாகக் கூறவிருக்கிறோம். இன்றைய சினிமாவின் ஆரோக்கியமான விஷயமாக எனக்கு ஒன்று தோன்றுகிறது. இன்று எத்தனை பெரிய நட்சத்திரங்கள் நடித்தாலும் அவை வெற்றிபெறும் என்று கூற முடியாது. ஆனால் நல்ல கதை அம்சம் உள்ள படங்கள், புதுமையான திரைக்கதை உள்ள படங்கள் இப்போது வெற்றி பெற்று வருகின்றன. இது ஒரு நல்ல ஆரோக்கியமான, என்னைப் போன்ற புதியவர்களுக்கு நம்பிக்கை தரும் ஒன்றாக இருக்கிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தின் மூலம் புகழ்பெற்ற வசனமான 'துடிக்கிறது மீசை' என்பதையே படத்தின் தலைப்பாக வைத்துள்ளோம். இத்தலைப்பு கோபத்தை குறியீடாக சொல்கிறது. இப்படத்திற்கு ஒளிப்பதிவு அசோக்குமார், இசை ஸ்ரீகாந்த் தேவா, பாடல்கள் இசைவாணன், சீர்காழி சிற்பி என்று சினிமா மீது பேரார்வமும் திறமையும் உள்ளவர்கள் இணைந்துள்ளார்கள். படப்பிடிப்புக்கு நம்பிக்கையோடு புறப்படுகிறது படக்குழு" என்றார்.

# மீண்டும் வேட்டை மன்னன் படத்தை கையில் எடுக்கும் நெல்சன்

2018ஆம் ஆண்டு நயன்தாரா நடிப்பில் வெளியான படம் 'கோலமாவு கோகிலா'. இப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமானவர் நெல்சன் திலிப்குமார். இப்படம் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. அதன்பின் சிவகார்த்திகேயனை வைத்து 'டாக்டர்' படத்தை இயக்கினார். இதன்மூலம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து, விஜய்யை வைத்து பீஸ்ட் படத்தை இயக்கினார். தற்போது ரஜினியின் ஜெயிலர் படத்தை நெல்சன் இயக்கியுள்ளார். இப்படத்தின் ஷோகேஸ் வீடியோ நேற்று வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. நெல்சன் திலிப்குமார் முதன் முதலில் சிம்புவை வைத்து வேட்டை மன்னன் என்ற படத்தை இயக்கினார். சிலமாதங்கள்படப்பிடிப்புநடைப்பெற்றநிலையில்தவிர்க்கமுடியாதகாரணங்களால்தடைப்பட்டுவெளியாகாமல் போனது. அன்றைய பொழுது அப்படத்தில் இடம்பெற்ற சிம்புவின் போஸ்டர்கள் வெளியாகி அனைவரையும் கவர்ந்தது. இன்றளவும் சிம்பு ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கும் படங்களில் வேட்டை மன்னனும் ஒன்று. இந்நிலையில் வேட்டை மன்னன் படத்தை மீண்டும் கையில் எடுக்க நெல்சன் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. ஜெயிலர் படத்தின் வெளியீட்டிற்கு பிறகு வேட்டை மன்னன் படத்தின் பணிகளில் நெல்சன் இறங்கவுள்ளதாகவும் இது தொடர்பான அறிவிப்புகள் வெளியாகும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.




# தீபிகா மிகப்பெரிய சூப்பர் ஸ்டார்.. பிரபாஸ் புகழாரம்

நடிகர் பிரபாஸ் தற்போது 'கல்கி 2898 ஏடி' திரைப்படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இயக்குனர் நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'கல்கி 2898 ஏடி' (KALKI 2898AD). இந்த படத்தில் பிரபாஸ், தீபிகா படுகோனே, அமிதாப் பச்சன், கமல், திஷா பதானி, உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். சயின்ஸ் ஃபிக்சன் படமாக உருவாகும்இப்படத்தைவைஜெயந்திமூவிஸ்நிறுவனம் தயாரிக்கிறது. 'கல்கி 2898 ஏடி' (KALKI 2898AD) திரைப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. நடிகர் பிரபாஸ் சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில் தீபிகா சூப்பர் ஸ்டார் என்று கூறியுள்ளார். அவர் கூறியதாவது, தீபிகா படுகோனே மிகப்பெரிய சூப்பர் ஸ்டார். மிகவும் அழகான பெண் மற்றும் உலகம் முழுவதும் ஏற்கெனவே மிகவும் பிரபலமானவர். படப்பிடிப்பு தளத்தில் மிகவும் துடிப்போடு இருப்பார். அவரை எனக்கு எப்போதும் பிடிக்கும். நான் அவருடன் பணியாற்ற விரும்பினேன். இப்போதுதான் முதல் முறையாக அவருடன் இணைந்து நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது என்று கூறினார்.





# ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் பி.வி.சிந்து, ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேற்றம்

4 ஆகஸ்ட் 2023 3:35 AM ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்ரீகாந்த், எச்.எஸ்.பிரனோய் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறினர். பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆஸ்திரேலிய ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி சிட்னியில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீரரான இந்தியாவின் ஸ்ரீகாந்த் 2110, 2117 என்ற நேர்செட்டில் சீன தைபேயின் சு லி யாங்கை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார். இந்தியாவின் எச்.எஸ்.பிரனாய் சரிவில் இருந்து மீண்டு 1921, 2119, 2113 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் சி யூ ஜென்னை வீழ்த்தி காலிறுதியை எட்டினார்.

இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத் 218, 1321, 2119 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் வாங் சூ வெய்யை விரட்டியடித்தார். இதேபோல், பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 2114, 2110 என்ற நேர்செட்டில், சக நாட்டு வீராங்கனை ஆகார்ஷி காஷ்யப்பை தோற்கடித்து காலிறுதிக்கு தகுதி பெற்றார்.



# திலக் வர்மா அதிரடி வீண் 4 ரன்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீஸ் திரில் வெற்றி

முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 149 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய இந்தியா 145 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி தரோபாவில் உள்ள பிரையன் லாரா ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்றது. டாஸ் வென்று முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 149 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ரோமன் பாவெல் 48 ரன்கள் குவித்தார். நிகோலஸ் பூரன் 41 ரன்கள், பிராண்டன் கிங் 28 ரன்கள் எடுத்தனர். இந்திய அணி சார்பில் அர்ஷ்தீப் சிங், யுஸ்வேந்திர சாஹல் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். இதையடுத்து, 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் 3 ரன்னிலும், இஷான் கிஷன் 6 ரன்னிலும் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தனர். அடுத்து இறங்கிய சூர்யகுமார் யாதவ் 21 ரன்னில் வெளியேறினார். அறிமுக போட்டியில் களமிறங்கிய திலக் வர்மா அதிரடியாக ஆடினார். அவர் 22 பந்தில் 3 சிக்சர், 2 பவுண்டரி உள்பட 39 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். கேப்டன் ஹர்திக் பாண்ட்யா 19 ரன்னும், சஞ்சு சாம்சன் 12 ரன்னும் எடுத்தனர். இறுதியில் இந்திய அணி 9 விக்கெட்டுக்கு 145 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 4 ரன்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீஸ் திரில் வெற்றி பெற்றது. டி20 தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது. வெஸ்ட் இண்டீஸ் சார்பில் மெக்காய், ஹோல்டர், ஷெப்பர்ட் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.



# ஆசிய சாம்பியன் ஹாக்கி சீனாவை வீழ்த்தி வெற்றிக் கணக்கை தொடங்கியது இந்தியா

7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது. முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் தென் கொரியா, ஜப்பான் அணிகள் மோதின. இதில் தென்கொரிய அணி 2-1 என வெற்றி பெற்றது.

இரண்டாவது லீக் ஆட்டத்தில் மலேசிய அணி 3-1 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தியது. இந்நிலையில், இரவு 8.30 மணிக்கு தொடங்கிய ஆட்டத்தில் இந்திய அணி சீனாவுடன் மோதியது. போட்டியின் துவக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்தது. இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் 6-2 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் இந்தியா மேலும் ஒரு கோல் அடித்தது. இறுதியில், இந்தியா 7-2 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தியது.

# 100 மீட்டர் ஓட்டத்தில் கடைசியாக வந்த வீராங்கனை.. சோமாலியா விளையாட்டு துறை அதிகாரி சஸ்பெண்ட்




சீனாவில் சமீபத்தில் கோடைகால சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில், 100 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்ற சோமாலிய வீராங்கனை மிகவும் மந்தமாக ஓடி கடைசியாக வந்து இலக்கை தொட்டார். கடைசியாக வந்த வீராங்கனையின் வீடியோவை ஒருவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டிருக்கிறார். இந்த வீடியோ வைரலானது. அந்த வீராங்கனை சரியாக பயிற்சி பெறாததுபோல் தோன்றியது. வீடியோவைப் பார்த்த பலரும் சோமாலியாவின் தடகள அமைப்பை கேலி செய்யத் தொடங்கினர். இந்த புதிய ஓட்டப்பந்தய வீராங்கனையை சீனாவில் நடக்கும் போட்டிக்கு அனுப்பியதன் பின்னணி குறித்து பல பயனர்கள் கேள்வி எழுப்பினர். அந்த வீராங்கனை தடகள போட்டியின் வரலாற்றில் மிக மெதுவாக ஓடியதற்கான சாதனையை படைத்துள்ளார் என்றும், சர்வதேச விளையாட்டுகளில் பங்கேற்ற மோசமான வீராங்கனை என்றும் விமர்சனம் செய்தனர். இந்த வீடியோவை டுவிட்டரில் பகிர்ந்த எல்ஹாம் கராட் என்ற பயனர், சோமாலிய அதிகாரிகளை வாரிசு ஆதிக்கம் என்று குற்றம் சாட்டினார். "அது சோமாலி தடகள சம்மேளன தலைவரின் மருமகள். அவரிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? இது வாரிசு ஆதிக்கம். சோமாலியாவில் எங்களிடம் சிறந்த விளையாட்டு வீரர்கள் உள்ளனர், ஆனால் பணம் என்று வரும்போது அது வேறு கதை" என்று ட்வீட் செய்தார். இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், சோமாலி தடகள கூட்டமைப்பின் தலைவர் காதிஜோ அடன் தாஹிரை சோமாலியாவின் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சஸ்பெண்ட் செய்திருப்பதாக அறிவித்தது.

# உலக கோப்பை மகளிர் கால்பந்து: பிரேசில், அர்ஜென்டினா வெளியேற்றம்



உலக கோப்பை மகளிர் கால்பந்து போட்டி ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. ஹேமில்டனில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் 'ஜி' பிரிவில் உள்ள சுவீடன்அர்ஜென்டினா அணிகள் மோதின. இதில் சுவீடன் 20 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தியது. அந்த அணி 'ஹாட்ரிக்' வெற்றியை பெற்றது.

தென் ஆப்பிரிக்காவை 21 என்ற கணக்கிலும், இத்தாலியை 50 என்ற கணக்கிலும் வீழ்த்தி இருந்தது.

இதே பிரிவில் வெலிங்டனில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் தென்ஆப்பிரிக்காஇத்தாலி அணிகள் மோதின. இதில் தென் ஆப்பிரிக்கா 32 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 'ஜி' பிரிவில் சுவீடன் 3 வெற்றியுடன்9புள்ளிகள்பெற்றுமுதல்இடத்தையும், தென் ஆப்பிரிக்கா 1 வெற்றி, 1 டிரா, 1 தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்று 2வது இடத்தையும் பிடித்து நாக் அவுட்டான 2வது சுற்றுக்கு தகுதி பெற்றன.

இத்தாலி 1 வெற்றி, 2 தோல்வியுடன் 3 புள்ளிகள் பெற்று 3வது இடத்தையும், அர்ஜென்டினா ஒரு டிரா, 2 தோல்வியுடன் 1 புள்ளிகள் பெற்று கடைசி இடத்தையும் பிடித்தன. இத்தாலி, அர்ஜென்டினா அணிகள் வெளியேற்றப்பட்டன. சிட்னியில் நடந்த 'எப்' பிரிவு ஆட்டம் ஒன்றில் பிரான்ஸ்பனாமா அணிகள் மோதின.

பிரான்ஸ் அணி கோல் மழை பொழிந்தது. அந்த அணி 63 என்ற கோல் கணக்கில் பனாமாவை வீழ்த்தியது. இதே பிரிவில் மெல்போர்னில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் பிரேசில் ஜமைக்கா அணிகள்மோதின. இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி 'டிரா' ஆனது. ஜமைக்காவை வீழ்த்த முடியாததால் பிரேசில் அணி அடுத்த சுற்று வாய்ப்பை இழந்தது.

இந்த பிரிவில் பிரான்ஸ் 7 புள்ளியுடன் முதல் இடத்தையும், ஜமைக்கா 5 புள்ளியுடன் 2வது இடத்தையும் பிடித்து 2வது சுற்றுக்கு தகுதி பெற்றன. பிரேசில் 4 புள்ளியுடன் 3வது இடத்தையும், பனாமா புள்ளி எதுவும் பெறாமல் 4வது இடத் தையும் பிடித்து வெளியேறின. இன்றுடன் 'லீக்' ஆட்டங்கள் முடிவடைகிறது. 'எச்' பிரிவில் நடைபெறும் ஆட்டங்களில் மொராக்கோகொலாம்பியா, ஜெர்மனி தென்கொரியா அணிகள் மோதுகின்றன. இதுவரை சுவிட்சர்லாந்து, நார்வே, ஆஸ்திரேலியா, நைஜீரியா, ஜப்பான், ஸ்பெயின், இங்கிலாந்து, டென்மார்க், நெதர்லாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜமைக்கா, சுவீடன், தென் ஆப்பிரிக்கா ஆகிய அணிகள் 2வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. இன்றைய போட்டி முடிவில் 2 அணிகள் தகுதி பெறும். 2வது சுற்று போட்டிகள் இன்று தொடங்குகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.